செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

University of Jaffna Sri Lanka
RECEIVED
2
7 - 8
Periodicals Division
Library

இல: 1102 | 1970 ஆகஸ்ட் 7 வெள்ளிக்கிழமை ★ | விலை சதம் ௧

## மின்னல் தாக்கிக் கீழே விழுந்தது:

# விமானம் நொருங்கி முப்பது பேர் சாவு

**பிரயாணிகள் விமானிகள் எவருமே தப்பவில்லை**

ராவல்பிண்டி, ஆக. 6

**பாகிஸ்தான் விமான சேவையைச் சேர்ந்த, விமானம் ஒன்று ராவல் பிண்டியில் இன்று அதிகாலை விபத்துக்குள்ளானபோது அதிலிருந்த 30 பேரும் கொல்லப்பட்டனர்.**

விமானம் மின்னலால் தாக்குண்டு விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று விமானக் கம்பெனி பேச்சாளர் ஒருவர் சொன்னார்-

விமானம் வெடித்து ஒரு வயலில் விழுந்தது- அதில் 26 பிரயாணிகள் இருந்தனர்- இவர்களில் இரு பெண்களும் ஒரு குழந்தையும் நான்கு விமானிகளும் இருந்தனர்- இந்த முப்பது பேரில் எவருமே உயிர் பிழைக்கவில்லை-

ராவல்பிண்டியில் இருந்து புறப்பட்டுச் சற்று நேரத்தில் விமானத் தொடர்பு வானொலித் தொடர்பு துண்டிக்கப்பட்டது- இது ஒரு மணி நேரத்தில் லாகூர் போய்ச் சேர்வதற்கு இருந்தது-

ராவல்பிண்டியில் இருந்து 12 மைல் தூரத்தில் பயங்கர மழையிலும் புயலிலும் சிக்கிய விமானம் ஒரு வயலில் விழுந்து நொருங்கியது-

விபத்துக்குள்ளான விமானத்தில் வெளிநாட்டவர்கள் எவரும் இருந்ததாக அறிவிக்கப்படவில்லை-

வயலில் அதிகாலையில் பிரேதங்களும் நொருங்கிய விமானத்தின் துண்டுகளும் சாமான்களும் சிதறிக் கிடந்தன- இவை சுமார் 100 யார் அகலமுள்ள பரப்பில் கிடந்தன-

சிவில் விமானத் துறை அதிகாரிகள் மூவர் இன்று கராச்சியில் இருந்து விமானம் மூலம் பறந்து வந்து இங்கு விசாரணை நடத்தினர்- இப்போது அமெரிக்காவிலிருக்கும் விமானக் கம்பனி மனேஜர் உடனடியாக நாடு திரும்ப உள்ளார்- (ஐ)

## பொலீஸ் காவல்

யாழ்ப்பாணம், ஆக. 6

கீரிமலையில் உள்ள திரு. வி. சுந்தரலிங்கத்தின் (மாவை ஆலய உற்சவ கால நிர்வாகி) வீட்டுக்குப் பொலீஸ் காவல் போடப்பட்டுள்ளது.

திரு. சுந்தரலிங்கம் வவுனியா நீதிமன்றத்தில் ஒரு வழக்கில் ஆஜராகச் சென்றுவிட்டு ஊர் திரும்பினர்- அப்போது அவருடன் காரில் பொலீஸ்காரர்களும் இருந்தனர்-

## மீருட்சி



மண்ணெண்ணெய், பெற்ரோல் விற்கிறவங்களும் எல்லே மோசடி செய்ய ஆரம்பிச்சுட்டாங்களாம்! இந்தப் பேர்வளிகள பிடிச்சு மண்கௌவ வைத்தால் தான் சரி.

## பெண்கள் பிரயாணம் செய்ய தனி பஸ் சேவை ஆரம்பம்

"பெண்கள் மாத்திரம்" பிரயாணம் செய்யக்கூடிய மூன்று விசேட பஸ் சேவைகளை இலங்கைப் போக்குவரத்துச் சபை பரீட்சார்த்தமாக ஆரம்பித்துள்ளது.

மாலையில் 4-45 மணிக்கும் 5-00 மணிக்கும் இடையில் கொழும்புக் கோட்டையில் இருந்து இந்தப் "பெண்கள் மாத்திரம்" பஸ்கள் புறப்படும். மாலை வேளையில், சன நெருக்கமான நேரங்களில் பெண்கள் படும் கஷ்டத்தைப் போக்கவே இந்த சேவை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த மூன்று சேவையும் வெற்றியளித்தால், மாலை நேரங்களில், மேலும் பல "பெண்கள் மாத்திரம்" பஸ் சேவைகளை ஆரம்பிக்க இலங்கை போக்குவரத்துச் சபை தீர்மானித்துள்ளது.

தற்பொழுது ஆரம்பிக்கப்பட் "பெண்கள் மாத்திரம்" சேவை கொழும்புக் கோட்டையிலிருந்து வெள்ளவத்தை கிரிபத்கொடை, நுகேகொடை ஆகிய இடங்களுக்கே ஓடவிடப்பட்டுள்ளது.

## எசல பெரஹரா

கொழும்பு, ஆக. 7

கண்டி எசல பெரஹரா இன்று ஆரம்பமாகிறது.

ஆகஸ்ட் 17-ல் நடைபெறும் ரந்தோலி மகா எசல பெரஹராவுடன் விழா முடிவுறும்- (ம-15)



மகாராணியின் தாயாரான எலிச பெத் மகாராணியார் இலங்கைப் பெண்ணை செல்வி எம்-அதிகாரியுடன் அளவளாவுகிறார். ஒக்ஸ் போர்ட் அருகில் பிளென்ஹெம் மாளிகையில் அண்மையில் நடைபெற்ற ஒரு விருந்துவைபவத்தில் அவர் தூமன்வெல்த் மாஜிஸ்திரேட்டுகளைச் சந்தித்த போது இந்தச் சம்பாஷணை இடம் பெற்றது.

உகண்டாவைச் சேர்ந்த பிரதம மாஜிஸ்திரேட் எஸ். கே. களுபியா (வலமிருந்து மூன்ருவது), சைப்ரஸை சேர்ந்த நீதிபதி செல். அயோனிடேஸ் (வலமிருந்து இரண்டாவது) ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். முதல் முறையாக நடைபெற்ற இந்தக் காமன் வெல்த் மாஜிஸ்திரேட்டுக்கள் மாநாட்டில் 25 நாடுகளைச் சேர்ந்த ஐம்பதுக்கும் அதிகமான மாஜிஸ்திரேட்டுகள் கலந்து கொண்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவு 8 அல்லது 9 மணிக்கு எதிர் மனுதார் செல்வார்

# தோட்டம் முழுவதுமே இந்த உறவை அறியும்

### கண்டி நீதிமன்றத்தில் தோட்டப் பெண் சாட்சியம்

கண்டி, ஆக. 6

இவ்வழக்கின் மனுதார் இருமுறை திருமண மானவர் என்பதும் அவரது கணவன்மார் இருவரும் இறந்து விட்டனர் என்பதும் தெரியும் எனக் கூறிய சாட்சியான ஒரு பெண், எதிர்மனுதார் இரவில் மனுதாரின் வீட்டுக்குப் போய் வந்தார் என்றும் குறிப்பிட்டார்.

கண்டி நீதவான் திரு. எப். பி. ஜி. பெர்னாண்டோ முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட ஜீவனாம்ச வழக்கொன்றில் தோட்டத் தொழிலாளியான பார்வதி என்னும் பெண்ணே சாட்சியமளிக்கையில் இவ்வாறு கூறினார்.

கலஹா, அம்பலவாணர் குரூப்பைச் சேர்ந்த தொழிலாளியான ஏ.காமாட்சி என்னும் பெண் அதே தோட்டத்தைச் சேர்ந்த கே. ராமசாமி என்பவரிடம் இருந்து ஜீவனாம்சம் கோரி இவ்வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

எதிர் மனுதாரின் ஆசை நாயகியாக தான் வாழ்ந்ததால் குழந்தையொன்றைப் பெற்றதாக மனுதார் கூறினார். இதை எதிர் மனுதார் மறுக்கவே வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அதே தோட்டத்தைச் சேர்ந்த கிருபநாதரின் மனைவியான பார்வதி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:- "மனுதாரின் லயத்து அறைக்கு எதிர் அறையிலேயே நான் வசிக்கின்றேன். சுமார் 4 அல்லது 5 வருடங்களாக எதிர் மனுதார் தினமும் இரவு 8 அல்லது 9 மணிக்கு மனுதாரின் வீட்டுக்குச் செல்வதைக் கண்டிருக்கின்றேன்.

நான் மட்டுமல்ல தோட்டம் முழுவதுமே இதை அறியும். மனுதாரின் இரண்டாவது கணவர் இறந்த பின்னர் தனது பெற்றோருடன் மனுதார் வாழ்ந்தார்.

மனுதாருடன் எதிர் மனுதார் நட்பு கொள்ளவே அவரது பெற்றோர் அவரைப் பிரித்து விட்டனர். அதையடுத்து மனுதார் பெற்றோரின் வீட்டு விறுந்தையில் வசிக்கத் தொடங்கினார்.

எதிர் மனுதார் திருமணமானவர் என்று தெரியும். அவரது மனைவியும் உயிருடன் இருக்கின்றார்."

நீதவான்:- (எதிர் மனுதாரைப் பார்த்து) உமக்கு எதிராக பலமான சாட்சியம் இருக்கின்றது. பிள்ளை உம்முடையது என்பதையாவது ஏற்றுக் கொள்ளும். வழக்கை விசாரணை செய்து நீர்தான் தந்தை என்பதைக் கண்டால் ஆகக் கூடிய தொகையை விதிக்கத் தயங்க மாட்டேன்.

இதையடுத்து எதிர் மனுதார் பிள்ளை தன்னுடையதுதான் என்பதை ஏற்றுக் கொள்ளவே நீதவான், மாதம் 20 ரூபா செலுத்தும்படி உத்தரவிட்டார். (ர)

### யானை ஓட, ஓட விரட்டியது தந்தையையும் பிள்ளைகளையும்

மஹியங்கனை காட்டில் வெறி கொண்ட யானை ஒன்றிடம் இருந்து மூவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினர். ஆனால் யானையினால் விரட்டப்பட்டு தூக்கியெறியப்பட்ட இம்மூவரும் பதுளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

தந்தையும் இரு புத்திரர்களுமே காட்டு யானையிடம் சிக்கினர். ஏ. எம். அப்புஹாமி, ஏ. எம். பிரேமதாச (9 வயது) ஏ. எம். ஜயசுந்தர (10 வயது) ஆகியோரே இம் மூவருமாவர்.

இச்சம்பவம் பற்றி அப்புஹாமி கூறியதாவது:— "சம்பவ தினம் வீட்டிலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் காட்டில் வேலை செய்து கொண்டிருந்தேன்.

வழமை போல புத்திரர்கள் அன்று எனக்கு சாப்பாடு கொண்டு வந்துள்ளனர். தனிமையான இடமொன்றில் வெறி கொண்ட யானையொன்று அவர்களைத் துரத்தியுள்ளது.

இளைய மகன் கீழே விழுந்து விடவே யானை அவனை குழியொன்றினுள் தூக்கி எறிந்துள்ளது. மற்ற மகன் ஓடி ஒளிந்து கொண்டான்.

கூச்சல் கேட்டு நான் ஓடிப் போன போது யானை என்னை விரட்டியது. மரம் ஒன்றில் ஏறி நான் உயிர் தப்பினேன்." (ர)

### பெண்ணைக்குத்தியவாலிபர் நஞ்சு குடித்து மாண்டார்

"இப்பரிதாப முடிவுக்கு வரு முன் என் மருமகன் ஒரு இளம் பெண்ணைக் கழுத்தில் குத்திக் காயப்படுத்தி விட்டார். அவர்களுக்குள் அந்தரங்கத் தொடர்பு ஏதும் இருந்ததா என்பது தெரியாது. அவளைக் குத்தியதால் ஏற்படும் விளைவுகளை எண்ணிப் பயந்தே தற்கொலை செய்திருப்பார் என நினைக்கிறேன்".

லில்லியம் வெத்தசிங்கா (54 வயது) மேற்கண்டவாறு சாட்சியம் அளித்தார்.

கோணபொல, கும்புக்கே என்னும் இடத்தைச் சேர்ந்த, 18 வயதான ஆர். வைத்தியசேகர ஜயதிலக்கா என்பவர் நஞ்சு குடித்து தற்கொலை செய்து கொண்டார். ஹொரணை மரண விசாரணை அதிகாரி திரு. டபிள்யூ. ஏ. டி. பொன்சேகா மரண விசாரணை நடாத்தினார்.

லில்லியம் வெத்த சிங்கா மேலும் சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:—

"கடந்த ஒன்றரை வருடமாக ஜயதிலகா என் வீட்டில் வசிக்கிறார். சம்பவ தினம், வெளியில் சத்தம் கேட்டு ஓடினேன். அயலில் உள்ள சந்திராவதி, "என்னைக் குத்தி விட்டான்" என்று குளறினார். "உமது வீட்டிலுள்ள சுட்டாதான் குத்தினார்" என்று கூறினாள்.

அவள் போய் சில நிமிடத்தில் "மாமி, நான் நஞ்சு குடித்து விட்டேன்" என்று கூறிக் கொண்டு ஜயதிலக்க படுக்கையில் விழுந்தான்.

இறந்தவரின் தாயாரும் மற்றும் பலரும் சாட்சியமளித்த பின், தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ர-15)

### இரண்டு கொத்து அரிசிபற்றிகேள்வி

இரண்டு கொத்து அரிசி வழங்கும் திட்டத்தை அமுல் படுத்துவது தாமதமாவதின் காரணம் என்ன? மேலதிக ஒரு கொத்து அரிசி எப்போது வழங்கப்படும். மேலதிக ஒரு கொத்து அரிசி வழங்குவதற்கான செலவு என்ன என்றும் அறிய விரும்புகிறோம்.

செனட்டர் டாக்டர் கல்பகே மூதவையில் இவ்வாறு கேள்வி எழுப்பினார். தபால், தந்தி அமைச்சர் திரு. சி. குமாரசூரியர் பதிலளிக்கையில், இக் கேள்வி விவாதத்துடன் சம்பந்தப்பட்டது அல்ல. என்றும் ஆனால் வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றும் என்றும் கூறினார். (ர)

### கண்டி தீர்ப்பு ஒத்திவைப்பு

கண்டித் தொகுதிக்கு திரு. ஈ. எல். சேனநாயக்கா தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான ஆட்சேபம் பற்றி பூர்வாங்க விசாரணை நடத்திய நீதியரசர் திரு. ஏ. சி. ஏ. அலெஸ் தீர்ப்பு வழங்குவதை ஒத்தி வைத்தார் (ர)

### ஏமாற்றிய அரசு ஊழியருக்கு மூன்று மாத கடூழியச் சிறை

அரசாங்க ஊழியர் ஒருவருக்கு, கொழும்பு தெற்கு நீதவான் திரு. கொலின் மெண்டிசால் மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

கொழும்பு தொழில் திணைக்களத்தைச் சேர்ந்த எரிக் லயனல் குணவர்த்தன என்பவரே இவ்வாறு தண்டிக்கப்பட்டவர்.

புதிய டெலிபோன் வசதியைப் பெற்றுத் தருவதாகக் கூறி, சீதுவையைச் சேர்ந்த கரோலிஸ் அப்போன்ஸோ என்பவரிடம் இருந்து ரூபா 350 பெற்று ஏமாற்றி விட்டதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

அப்போன்ஸோ டெலிபோன் வசதி கோரி 1964-ல் விண்ணப்பித்திருந்தார். கொள்ளுப்பிட்டி தந்தி, போக்கு வரத்துக் காரியாலயத்துக்கு தனது நண்பர் ஜயசேனவுடன் ரூ. 720 பிணைப்பணம் கட்டுவதற்காக வந்திருந்தார். அங்கு ஜயசேன மூலம் அறிமுகமாகிய எதிரி, இரு கிழமைக்குள் டெலிபோன் பெற்றுத் தருவதாகக் கூறினார். பிணைப் பணத்தையும் அரை வாசியாகக் குறைத்துத் தருவதாகச் சொல்லி ரூ. 350 பெற்றுக் கொண்டு, பற்றுச் சீட்டும் கொடுத்தார்.

இரு கிழமைக்குள் டெலிபோன் கிடைக்காததால், அப்போன்ஸோ மீண்டும் கொள்ளுப்பிட்டி தந்திக் கந்தோருக்கு வந்து விசாரித்த பொழுது, தாம் ஏமாற்றப்பட்டு விட்டதை உணர்ந்தார்.

விசாரணை முடிவில் எதிரிக்கு மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. (ர-15)

### செயல் வேண்டும்

"கறுப்புச் சந்தைக்காரர்கள், பதுக்கல் பேர்வழிகள் முதலியவர்களுக்கு அரசாங்கம் எவ்விதமான கருணையும் காட்டாது. வரவிருக்கும் சட்டத்தின்படி கொள்ளை லாபக்காரர்களுக்கு முதலாவது குற்றத்துக்கு மூன்றாண்டு சிறைத் தண்டனையும், இரண்டாவது குற்றத்துக்கு பத்தாண்டு சிறைத் தண்டனையும், அதன் பின்னர் சதாகால மறியலும் வழங்கப்படும். இலங்கையர் அல்லாதவர்கள் கொள்ளை லாபம் அடித்தால் அவர்களது விசா பறிக்கப்பட்டு நாடு கடத்தப்படுவார்கள்." இலங்கையின் நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா அவர்கள் நாவான்வெலையில் ஒரு கூட்டத்தில் இவ்வாறு கூறியுள்ளார். இதையும் சொல்லலாம் இதற்கு மேலும் சொல்லலாம்; ஆனால் செயல் வேண்டும். செயல் இல்லாதவரையில் கொள்ளைலாபக்காரரை நிறுத்தவே முடியாது. தூரத்துக்குப் போகத் தேவையில்லை. கொழும்பு புறக்கோட்டைப் பகுதியிலுள்ள பல கடைகளுக்கும் போங்கள். கட்டுப்பாட்டு விலைக்கு ஏதாவது வாங்க முடிகின்றதா? கொழும்பில் விலைக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்கள் இருக்கின்றார்களா என்றே எண்ணத் தோன்றும். விசாக்காரரின் அட்டகாசம் தொலையாதா?

தந்தி

### மிளகாய் தோட்டத்தில் கஞ்சா பயிர்

கந்தளாய், ஆக. 6

இறால்குளி என்னும் இடத்தை அடுத்துள்ள கட்டைவிழுந்தான் என்னும் பகுதியில் மிளகாய் தோட்டத்தில் கஞ்சா செடி வளர்ந்து இருந்ததை மூதூர் பொலீஸ் சார்ஜண்ட் தலைமையில் சென்ற கோஷ்டி கண்டு பிடித்தது.

சந்தேகத்தின் பேரில் ஒரு நபரை பொலீஸ் கோஷ்டி கைது செய்தது. (ர-141)

### மனமுடைந்த காதலர்கள் மயானம்அருகேபலியாகினர்

மாத்தறை, ஆக. 6

அதிக மன வேதனைக்குள்ளான காதலர் இருவர் மயானம் ஒன்றின் அருகே நஞ்சுகுடித்து உயிரை மாய்த்துக் கொண்டார்கள்.

நஞ்சு குடித்து மயங்கி விழுந்து கிடந்த இருவரும் மாத்தறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தில் மரணமானார்கள்.

மொரவக்க பொலீஸ் பகுதியைச் சேர்ந்த பிட்டபெத்தர தன்கொட்டுவ தோட்டத்தைச் சேர்ந்த 25 வயதுடைய தம்பிராஜா சந்திர காந்தன் என்னும் வாலிபரும் 16 வயதுடைய ஒரு யுவதியுமே காலமான காதலர்களாவர். (ர)

### கல்முனையில் பிக்பாக்கெட்

நிந்தவூர், ஆக. 6

கல்முனை பஸ் நிலையத்தில் "பிக்பாக்கெட்" திருடர் தொல்லை அதிகரித்து வருவதாகப் பிரயாணிகள் புகார் கூறுகின்றனர்.

மேலும் இந்த பஸ் நிலையத்தில் பிச்சைக்காரர் தொல்லையும் அதிகரித்து வருகின்றது. பஸ்களுக்குள்ளும் ஏறி பிச்சை வாங்குவதால் பிரயாணிகள் பெரும் உபத்திரவத்திற்குள்ளாகின்றனர். (ர-217)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேக நபர் தபசி வேடத்தில் கதிர்காமத்தில் கைது

# மூன்றுமாதக்கருவிலும் கத்திக் குத்து காயம்!

## மனைவியை, பிள்ளையை கொன்றதாக வழக்கு

"மூன்று மாத கர்ப்பிணியான சந்தேக நபரின் மனைவியின் உடலில் 11 பலத்த வெளிக் காயங்கள் இருந்தன. அவரது வயிற்றிலும் கழுத்திலும் கத்தியால் பலமாக வெட்டப்பட்டு இருந்தது. வயிற்றில் இருந்த சிசுவும் காயம் அடைந்திருந்தது".

தென் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியான டாக்டர் டைட்டஸ் பி. ஜே. பெர்னுண்டோ தென் கொழும்பு மேலதிக நீதவான் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்ட ஒரு கொலை வழக்கில் இவ்வாறு குறிப்பிட்டார்.

1968-ம் வருடம் ஜூன் மாதம் 27-ம் திகதி இரவு தனது மனைவியான மஹரகம, பமுனுவ ரோட்டைச் சேர்ந்த ஏ. டி. சுமணவதிக்கும் அவரது மகளான தே. பி. பியதர்சனிக்கும் மரணம் உண்டு பண்ணியதாக 26 வயதுடைய தே. தர்மசேன என்பவர் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

இவ்விரு கொலைகள் சம்பந்தமாக தேடப்பட்ட சந்தேக நபர் கதிர்காமத்தில் தபசி வேடம் பூண்டிருக்கையில் சுமார் மூன்று வாரங்களுக்கு முன்னர் பொலீஸாரினல் கைது செய்யப்பட்டார்.

இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சட்ட வைத்திய அதிகாரி சாட்சியம் அளித்ததாவது:— "சுமணவதியினதும் பியதர்சனியினதும் சடலங்களைப் பரிசோதனை செய்தேன். சந்தேக நபரின் மனைவியான சுமணவதி மூன்று மாத கர்ப்பிணியாக இருந்தார். அதிக இரத்தப் பெருக்கால் அவர் மரணம் அடைந்திருந்தார்.

"பியதர்சனியின் உடலில் நான்கு வெளிப்புற காயங்கள் காணப்பட்டன. கழுத்தில் ஏற்பட்டிருந்த காயமே அவரது மரணத்துக்கு காரணமாகும்.

"ஜூன் மாதம் 29-ம் திகதியே நான் பிரேதப் பரிசோதனை நடத்தினேன். மரணம் சம்பவித்து 36-க்கும் 48 மணிக்கும் இடைப்பட்ட காலம் அப்போது கழிந்திருந்தது எனக் கூறலாம்."

விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. (ர)

## கென்னடியின் மகனிடம் மரிஜுவானா?

மசாசூசெட்ஸ், ஆக. 6

"மரிஜுவானு" என்ற போதை வஸ்துவை வைத்திருந்ததாக காலஞ்சென்ற செனட்டர் றெபர்ட் கென்னடியின் 16 வயது மகன் மீது வழக்குத் தொடரப்பட உள்ளது.

கடந்த ஜூலை 10-ம் திகதி பொலீஸார் நடத்திய திடீர் முற்றுகையின் போது கைது செய்யப்பட்ட 17 பேரில் காலஞ்சென்ற செனட்டர் கென்னடியின் மகனும் ஒருவராவார்.

இன்று சிறுவர் நீதி மன்றத்தில் சந்தேக நபர்கள் ஆஜர் செய்யப்படுவார்கள்.

தனது மகன் பற்றி திருமதி கென்னடி கருத்துத் தெரிவிக்கையில், பொபி ஒரு நல்ல பிள்ளை என்றும் அவனின் நடவடிக்கைகள்பற்றித் தாம் எப்பொழுதும் பெருமிதம் அடைந்துவந்ததாகவும் கூறினர்.

## ஐ. நா.வின் விசேஷ அறிக்கை

ஐ. நா., ஆக. 6

தென் ஆபிரிக்கா சம்பந்தமான ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானம் கடுமையாக அமுல் செய்யப்பட வேண்டுமென்று ஐ. நா. வெளியிட்டுள்ள விசேஷ அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மனைவி குளிக்கப் போனதும் கணவன் விஷம் குடித்தார்

பதுளை, ஆக. 6

"நான் குளிக்கப் போய் திரும்பி வருவதற்குள் என் கணவர் இப்படிச் செய்து விட்டாரே" என்று பசறை கோணக்கொலையைச் சேர்ந்த செவந்தி என்ற பெண்மணி பதுளை மரணவிசாரணை அதிகாரி திரு. பி. பி. ரத்னுயக்கா முன்னிலையில் கண்ணீர் வடித்தார்.

ம். வடிவேல் (வயது-35) என்பவர் தற்கொலை செய்து கொண்டது பற்றி இவ்விசாரணை நடந்தது.

செவந்தி மேலும் கூறியதாவது: "ஒன்பது வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்து மூன்று பிள்ளைகள் பிறந்ததும் கணவருக்கு வயிற்றுவலி ஏற்பட்டது. சம்பவ தினத்தன்று குளிக்கப்போய் திரும்பியபோது, கணவர் வீட்டைப் பூட்டி விஷம் குடித்து இருந்தார். கதவை உடைத்து, பதுளைப் பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு சென்றேன்"

தற்கொலை என்று தீர்ப்புக் கூறப்பட்டது. (ர–278)

## காணித் தகராறு தலைமை ஆசிரியரைபலிவாங்கியதா?

பெரியகல்லாறு, ஆக. 6

பெரியகல்லாறுக் கிராமத்தில் காணித் தகராறு ஒன்றினல் தலைமை ஆசிரியர் ஒருவர் பரிதாபமாக துடி துடித்து மரணமானுர்.

இதுசம்பந்தமாக அதே கிராமத்தைச்சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறுர்கள்.

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று மாலை ஆசிரியர் வழக்கம் போல் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார் என்றும், சந்தேக நபர்களில் ஒருவர் குடிவெறியில் "கேற்" தகரத்தை உடைத்து வளவுக்குள் பிரவேசித்து ஆசிரியரை பலமாக தாக்கி கழுத்தை நசித்துக் கொலை செய்ததாக சொல்லப்படுகிறது.

சம்பவம் பற்றி பொலீஸார் விசாரணை நடத்தினர். கொலையுண்ட ஆசிரியருக்கும் சந்தேக நபர்களில் ஒருவருக்கும் இடையில் சமீபகாலமாக ஒரு காணி சம்பந்தமாக தகராறு இருந்துவந்ததாகவும், இதுபற்றி சட்ட நடவடிக்கை நடைபெற்றுக் கொண்டு வருகிறது என்றும் அறியப்படுகின்றது.

சந்தேக நபர் ஆசிரியரின் வீட்டுக்கு கல் எறிவதாக பல புகார்கள் பொலீஸில் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்திருக்கிறது என்றும் பொலீஸ் விசாரணையின் போது தெரியவந்தது. (ர–23)

## துவக்குச் சூடுபட்ட யானை ஆளைக்கொன்று காவல் நின்றது

செங்கலடி, ஆக. 6

பெரிய புல்லுமலைப் பகுதியில் உள்ள கொட்டாங்கச்சிக் காட்டுக்குச் சென்ற அறுவரில் ஒருவர் யானையிடம் சிக்கி பலியானர்.

இரண்டு துவக்குகளுடன் சென்ற இவர்களை சற்றும் எதிர்பாராத விதமாக ஒரு யானை துரத்தியுள்ளதாகச் சொல்லப்படுகிறது. துவக்குடன் சென்ற ஒருவர் கீழே விழுந்து ஒரு யானைக்கு வெடி வைத்திருக்கிறுர். அச்சமயம் நால்வர் ஒரு பக்கமும், ஒருவர் ஒரு பக்கமுமாக ஓட, வெடியை வாங்கிக் கொண்டு ஒருவர் ஓடிய திசையை நோக்கிப் பாய்ந்த யானை அவரைப் பிடித்து நசித்துக் கொன்றதாம்.

தப்பிய ஐவரும் பெரிய புல்லுமலை கிராம சேவகர் திரு. எஸ். சுப்பிரமணியத்திடம் முறையிட்டதைத் தொடர்ந்து, கிராம மக்கள் 50 பேருடன் வெளிச்சம் கொண்டு கிராம சேவகர் காட்டில் தேடிச் சென்ற போது, யானை பிரேதத்தின் பக்கத்திலேயே நின்று கொண்டு இருந்ததாம்.

கிராம மக்களின் நெடு நேர முயற்சியின் பின் பிரேதத்தை எடுக்க முடிந்ததாம். பெரிய புல்லுமலை கொஸ்கொல்லையைச் சேர்ந்த திரு. டி. எம். புஞ்சி பண்டா என்பவரே அந்நபராவார்.

மரண விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி திரு தே. எஸ். தம்பிராசா யானை அடித்ததால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார். (ர–56)

## விவசாயப் படைக்குப் பதில் தேசிய அபிவிருத்திப் படை

விவசாய, நீர்ப்பாசன திட்டங்களை பொறுப்பு ஏற்பதற்காக தேசிய அபிவிருத்திப் படையொன்று அமைக்கப்படும்.

முன்னைய அரசாங்கத்தினல் ஏற்படுத்தப்பட்ட விவசாயப் படை கலைக்கப்படும். தற்போது விவசாயப் படையைச் சேர்ந்த 7,800க்கு மேற்பட்டோர் ஒரு மாத கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளனர்.

தேசிய அபிவிருத்திப் படை எந்த வகையில் அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றிய திட்டத்தை நீர்ப்பாசன, மின்சார மந்திரி திரு. மைத்திரிபால சேன நாயக்க தயாரித்து வருகின்றார்.

நாடு முழுவதிலும் அமைக்கப்பட்டிருக்கும் 42 விவசாயப் படை முகாம்கள் தேசிய அபிவிருத்திப் படையின் கீழ் கொண்டு வரப்படும். (ர)


அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

### பதவி வெற்றிடம்

கீழ்க்காணும் பதவிக்கான விண்ணப்பங்கள் தேவையெனக் கருதப்படும் தகுதிகள் கொண்ட இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து கீழ்க் கையொப்பமிடும் உத்தியோகத்தரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கணக்காளர் பதவி

சம்பளம்: ரூபா 1350—6 X 50—1650 மாதமொன்றிற்கு எல்லாம் உட்பட. வயதெல்லை: 21–8–70 அன்று 30 வயதுக்கும் 40 வயதுக்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும். அரசாங்க கூட்டுத்தாபனச் சேவையில் உள்ளவர்களுக்கு மேற்கூறிய வயதெல்லை பொருந்தாது.

கல்வியும் மற்றும் தகமைகளும், "சார்டட்" கணக்காளர், இணைச் சங்கக் கணக்காளர் அல்லது செலவுக் கணக்காளர் நிலையத்தின் அங்கத்தவர் ஒருவராகவும் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவம் பெற்றவராகவும் அல்லது இந்நிலையங்கள் ஏதாவதொன்றின் இடையான பரீட்சையில் தேறியவராகவும், ஆகக் குறைந்தது 5 வருட அனுபவம் பெற்றவருமான ஒருவர் அல்லது கணக்காளர் இறுதித் தகுதித் தேர்வுப் பத்திரமும் 5 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் பெற்ற ஒருவர் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனச் சேவையில் உதவிக் கணக்காளராக 7 வருட அனுபவம் பெற்ற ஒருவராக இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் அவரது அனுபவ தகைமைகளுக்கு இணங்க மேற்கூறப்பட்ட சம்பள அளவுத் திட்டத்தின் ஏற்ற படியொன்றில் நியமிக்கப்படுவார்.

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் தலைவரிடமிருந்து பெறக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் 21–8–70 அன்று அல்லது அதற்கு முன்பு பதிவுசெய்யப்பட்ட கடிதவுறைகளில் தலைவர், அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், 2, பி. டிபொன்சேகா வீதி, கொழும்பு—5 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பங்களைக் கொண்ட கடிதவுறைகளின் மேல் இடது பக்கத்தில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிக்கப்பட வேண்டும்.

விண்ணப்பப் பத்திரங்களை நேர்முகமாகப் பெற விரும்புபவர்கள் சாதாரண அலுவல் நேரங்களில் இவ்வலுவலகத்திற்கு நேரில் வந்தும். தபால் மூலம் பெற விரும்புபவர்கள் தலைவர் அவர்களுக்குத் தமது விலாசமிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடிதவுறைகளை (அளவு 9" X 4") அனுப்பியும் பெறலாம். விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

தலைவர்.

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்.

2 பி., டி பொன்சேகா வீதி,
கொழும்பு – 5.
1970 ஜூலை 20–ம் திகதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாங்குளம் முக்கொலை வழக்கில் தீர்ப்பு

# 1-ம் எதிரிக்குத் தூக்கு 2-ம் எதிரிக்கு 15 வருடம்

யாழ்ப்பாணம், ஆக. 6

மாங்குளம் முக்கொலை வழக்கில் 1-ம் எதிரிக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டது. 2-ம் எதிரிக்கு மொத்தமாக 15 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

வட பகுதி உயர் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. ஏ. எல். எஸ். சிறிமான்ன இத்தீர்ப்பை இன்று வழங்கினர்.

ஒரு வாரமாக நடைபெற்ற இவ்வழக்கு விசாரணை இறுதியில் முதலாம் எதிரியான வில்லியத்துக்கு மரண தண்டனையும் இரண்டாம் எதிரியான ஏ. பியரத்னவுக்கு மூன்று குற்றச்சாட்டுகளுக்கு 15 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

1968-ம் வருடம் ஜூன் மாதம் 8-ம் திகதி செல்லத்துரை, சின்னையா, பால்ராஜ் ஆகிய மூவரையும் கொலை செய்ததாக இரு எதிரிகளும் குற்றம் சாட்டப் பட்டிருந்தனர்.

முதலாம் எதிரிக்கு முதலாவது குற்றச்சாட்டுக்கு 5 வருட கடூழியச் சிறைத் தண்டனையும், இரண்டாம் குற்றச்சாட்டுக்கு மரண தண்டனையும், மூன்றுவது குற்றச் சாட்டுக்கு 5 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

இரண்டாம் எதிரிக்கு மூன்று குற்றச்சாட்டுகளுக்கும் தலா 5 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (ர-220)

## சிறுமி மரண விபத்து வழக்கு சாரதியை கோர்ட் விடுதலை

திருகோணமலை, ஆக. 6

கார் ஒன்றை கவலையீனமாகச் செலுத்தி லிங்கேஸ்வரி என்ற சிறுமிக்கு மரண முண்டுபண்ணியதாக திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் டபிள்யூ. டி. டேவிட் என்பவருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில், எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

மரணமான சிறுமியின் தந்தையான உடையான் இராமன் சாட்சியமளிக்கையில், "சம்பவ தினம் நானும் மனைவி முனியம்மாவும் லிங்கேஸ்வரி, மகேஸ்வரி ஆகிய இரண்டு குழந்தைகளுடன் முற்ற வெளியினூடாக வீட்டுக்குத்திரும்பிக் கொண்டு இருந்தோம்.

"டொக்யார்ட் வீதியின் அருகே மரநிழலின் கீழ் பழைய பூட்டுக்களை திருத்திக் கொண்டு ஒருவர் இருந்தார். அவரிடம் எனது மனைவி கைக் குழந்தையுடன் செல்லவே நான் வீதியின் மறுகரையில் காலஞ்சென்றவருடன் நின்றேன்.

"திடீரென்று காலஞ் சென்ற குழந்தை, வீதியின் குறுக்கே தாயின் பின்னல் ஓடியது. திடீரென்று காலஞ்சென்ற குழந்தை வீதியைக் குறுக்கறுத்து ஓடியதும் அதனல் டாக்ஸியை திடீரென்று நிறுத்த முடியாமற் போனதே, இவ்விபத்துக்குக் காரணமாகும்"— என்று சாட்சி கூறிமுடித்தார். (ர-287)

## சேகுவேரா இயக்கத்துக்கு எதிராக "புதிய படை"

சேகுவேரா இயக்கம் அட்டூழியங்களில் ஈடுபடலாம் எனத் தெரிவிக்கும் சி. ஐ. டி. அறிக்கைகளை அடுத்து உதவிப் பொலீஸ் சுப்பிரண்டன் சி. ஐ. டி. திரு. கே. எச். டி. சில்வா தலைமையிலான "புதிய படை" ஒன்றை பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஸ்டான்லி சேனநாயக்கா ஏற்படுத்தியுள்ளார்.

இந்த விசேட குழு நாட்டில் பலபகுதிகளிலும் புலன் விசாரணைகள் நடத்தி சேகுவேரா இயக்கத்தின் நடவடிக்கை பற்றி ஐ. ஜி. பிக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்.

இளைஞர்களே இந்த இயக்கத்தில் அதிகம் பங்கு கொண்டுள்ளதாகவும், இவர்கள் ஆயுதங்களைச் சேகரித்து ஆங்காங்கு சதித் திட்டங்களை மேற்கொண்டு வருவதாகவும் முன்பு கண்டுபிடிக்கப் பட்டது.

இந்த இயக்கத்தைச் சேர்ந்த பலர் பயங்கர வேலைகளுக்காக பழக்கப்பட்டவர்கள் எனவும் கண்டு பிடிக்கப்பட்டது.

முன்னர் நடந்த விசாரணைகளின் பின் பலர் கைது செய்யப் பட்டு வழக்குத் தொடருவதற்குத் தேவையான சாட்சியங்கள் இல்லாததால் விடுதலை செய்யப் பட்டனர்.

ஆனல், இப்போது இவர்கள் மீண்டும் ஒன்றுகூடி பயங்கர நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக பொலீஸாருக்கு தகவல் கிட்டியுள்ளது.

றப்பர்

| | | | |
|---|---|---|---|
| ஆர். எஸ். எஸ். | நிர் | 1 | 83¾ |
| ஆர். எஸ். எஸ். | நிர் | 2 | 79½ |
| ஆர். எஸ். எஸ். | நிர் | 3 | 78¼ |

வெளியூர் டிப்போ

| | | | |
|---|---|---|---|
| ஆர். எஸ். எஸ். | நிர் | 1 | 82¾ |
| ஆர். எஸ். எஸ். | நிர் | 2 | 78½ |
| ஆர். எஸ். எஸ். | நிர் | 3 | 77¼ |
| ஆர். எஸ். எஸ். | நிர் | 4 | 75¾ |
| ஆர். எஸ். எஸ். | நிர் | 5 | 72¼ |

## கூட்டுறவுக்கு ஆலோசனைசபை

கூட்டுறவுத் துறை அபிவிருத்திக்காக ஆலோசனைச் சபைகளை நிறுவுவதற்கான திட்டம் ஒன்றை உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்ன தயாரித்துள்ளார்.

இதற்கென கூ. மொ. வி. நிலையத்தில் தனியான பிரிவொன்றை அமைப்பதென அமைச்சர் எண்ணியுள்ளார். (ர)

செனட்டில் கேள்வி

## கற்பழித்தால் அது குற்றமில்லையா?

ஒரு பெண்ணின் மார்பை அவள் விருப்பமின்றி தொடுவதோ, பிடித்துக் கசக்குவதோ நீதிமன்ற சட்டப்படி குற்றமாகும். ஆனல் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக ஆக்கப்பட்டு இருக்கும் புதிய அரசியல் சட்ட திருத்த மசோதாவின்படி அவர்கள் இச்செயலை புரிந்தால் அது குற்றமாகாது.

இவ்வாறு மூதவையில் புதிய அரசியல் சட்ட திருத்த மசோதா மீது பேசிய செனட்டர் கே. எம். பி. ராஜரத்தின கூறினர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"துரதிர்ஷ்ட வசமாக எமது சபையில் பெண் அங்கத்தவர்கள் இல்லை. ஆனல் நாடாளுமன்றத்தில் பல பெண் சகோதரிகள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இப்படி ஒரு சட்டம் வந்தால் பெண்களினது நிலை என்ன?

"நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஒரு பெண்ணை அவள் விருப்பமின்றி கற்பழித்தால் அது "குற்றமான செயல்" என இந்த திருத்தச் சட்டம் கருதவில்லை.

"மேலும் ஒருவர் இந்நாட்டுக்குள்ளோ, வெளியேயோ ஒரு பெண்ணை கடத்திச் செல்வதும் குற்றமாகாது. அப்பெண்ணுடன் அவர் எவ்வித துர் நடத்தையிலும் ஈடுபடவும் சட்டம் அனுமதிக்கிறது.

"இலங்கையை ஒரு கீழ்த்தர நாடாக்குவதுதான் இந்த சட்ட திருத்த மசோதாவின் நோக்கமோ என எண்ணத் தோன்றுகிறது" என்றூர். (ர-11)

டேட் கொலை வழக்கு

## மறுவிசாரணை விண்ணப்பம் நீதவானல் நிராகரிப்பு

லாஸ்ஏன்ஜல்ஸ், ஆக. 6

நடிகை ஷாரன்டேட் கொலை வழக்கு புதிதாக விசாரணை செய்யப்பட வேண்டும் என்னும் எதிரித் தரப்பின் கோரிக்கையை நிராகரித்த நீதியரசர் விசாரணையை தொடர உத்தரவிட்டார்.

சார்ல்ஸ் மேன்ஸன் குற்றவாளியென ஜனதிபதி நிக்ஸன் பிரஸ்தாபித்தது ஜூரர்களிடையே செல்வாக்கு பெறுது என நீதியரசர் சார்ல்ஸ் ஒல்டர் கூறினர்.

சாட்சியங்களை மட்டும் கொண்டே நீதியானதும் பாகுபாடு அற்றதுமான முடிவை ஜூரர்கள் வழங்க முடியும் எனத் தான திருப்தி கொள்வதாக நீதியரசர் கூறினர்.

ஜனதிபதியின் பிரஸ்தாபத்தை அடுத்து நீதியரசர் ஜூரர்களை தனித்தனியாக சந்தித்துப் பேசினர்.

நீதியரசரின் தீர்ப்பை அடுத்து எழுந்த மூன்று பெண் எதிரிகளும் பாட்டுப் பாடும் குரலில் "நாங்கள் குற்றவாளிகள் என ஜனதிபதி நினைப்பாரானல் எதற்காக விசாரணை செய்ய வேண்டும்" என்று கூறினர். இச் சந்தர்ப்பத்தில் தாடியை தடவிய படியே மேன்ஸன் சிரித்துக் கொண்டிருந்தார்.

பாட்டை நிறுத்தும் படி நீதியரசர் உத்தரவிட்டதும் மூன்று பெண்களும் தமது ஆசனத்தில் அமர்ந்தனர்.

இதையடுத்து 21 வயதுடைய திருமதி லிண்டா கஸரியன் மீண்டும் விசாரணை செய்யப்பட்டார்.

வழ:— நீர் எத்தனை தடவை மரிஜுவான புகைத்திருக்கிறீர்?

லிண்டா:— அனேக தடவைகள். எண்ணிக்கை தெரியாது.

வழ:— நூறு தடவைகள்

லிண்டா:— நிச்சயமாக.

வழ:— ஆயிரமாக இருக்கலாமா?

லிண்டா:— சாத்தியமானதே. (ர)

## இராணுவத்தினரால் இனி தொல்லை ஏற்படாதாம்

காங்கேசன்துறை, ஆக. 6

இராணுவத்தினரால் இனி எதுவித தொல்லையும் ஏற்படாது என்றும் மீனவர்கள் பயமின்றி கடலுக்குச் செல்ல உதவுவது என்றும் மகாநாடு ஒன்றில் முடிவு செய்யப்பட்டது.

ஊறணி, மயிலிட்டி மீனவர்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நடந்த தாக்குதல் பற்றி ஆராய கூட்டப்பட்ட மகாநாட்டிலேயே இம்முடிவு செய்யப்பட்டது.

காங்கேசன்துறை பொலீஸ் நிலையத்தில் நடைபெற்ற இம்மகாநாட்டில் யாழ். பதில் அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் காங்கேசன்துறை பட்டின சபைத் தலைவர் திரு. கு. ஜெயபாலசிங்கம், பொலீஸ் அதிபர் ஜோக்கிம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதற்கிடையில் மயிலிட்டியில் இராணுவ வீரருக்கும் பொது மக்களுக்கும் இடையில் நடைபெற்றதாகக் கூறப்படும் கைகலப்புச் சம்பவத்தையிட்டு பொலீஸார் ஐவரைக் கைது செய்துள்ளனர். இருவர் தலைமறைவாகத் திரிகின்றனர்.

இந்தச் சம்பவத்தைப் பற்றி விசாரிக்க வட மாகாண தள்ளக் குடியேற்றத் தடுப்பு அதிகாரி கேணல் அபயசேகரா கொழும்பு வந்துள்ளார். அவர் தமது அறிக்கையை இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஆட்டிகலையிடம் நேற்றுக் கையளித்தார் என அறியப்படுகிறது. (ர-290)

## கப்பலில் களவு

கொழும்பு, ஆக. 7

கொழும்புத் துறைமுகத்தில் "எம். வி. கிளான் மக்லியொட்" என்ற கப்பலில் இருந்து, 3-ந் திகதி இரவு, பல விலையுயர்ந்த பொருட்கள் களவு போய் விட்டதாக பொலீஸாரிடம் முறையிடப் பட்டுள்ளது.

இக்களவைக் கண்டு பிடிக்க பொதுமக்களின் உதவியைப் பொலீஸார் நாடுகின்றனர்.

## மாவையில் அமைதி

மாவிட்டபுரம் பகுதியில் இன்று அமைதி நிலவுகிறது.

நேற்று நடந்த அசம்பாவிதங்களைத் தவிர இன்று எதுவித அசம்பாவிதமும் நிகழவில்லை என பொலீஸார் தெரிவித்தனர்.

மாவிட்டபுரம் புகையிரத நிலையத்தில் ஆயுதம் தாங்கிய பொலீஸார் காவல் புரிகின்றனர்.

## பாடசாலைகளுக்கு விடுமுறை

ஆகஸ்ட் விடுமுறைக்காக எல்லா அரசாங்க பாடசாலைகளும் இம்மாதம் 8-ம் திகதி மூடப்பட்டு செப்டெம்பர் 1-ம் திகதி திறக்கப்படும்.

ஆனல் முஸ்லிம் பாடசாலைகள் இம்மாதம் 14-ம் திகதியே இந்த விடுமுறைக்காக மூடப்படும். (ர)

## பர்மா அரிசி மாத இறுதியில்

பர்மாவுடன் செய்து கொள்ளப் பட்ட 1 லட்சத்து 40 ஆயிரம் தொன் அரிசி ஒப்பந்தத்தில் 20 ஆயிரம் தொன் அரிசி இம்மாத இறுதியில் இங்கு வந்து சேரும் என உள்நாட்டு, வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது. (ர)

இப் பத்திரிகையை அச்சிட்டவர்: சுயாதீனப் பத்திரிகா சமாஜம். 5, குணசேன மாவத்தை, கொழும்பு — 12 (இலங்கை).
வெளியிட்ட திகதி 7 ஆகஸ்ட் 1970
Thanthi, 5, Gunasena Mawatha, Colombo 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org